# 2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற விருத்தாசலம் நகர்மன்றத்தின் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :**
**திரு. க. பாலு,**
**தனி அதிகாரி,**
**விருத்தாசலம் நகராட்சி.**

<u>பொருள் எண். 1.</u>

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN-31-AZ-3056 டிப்பர் லாரி வாகனத்தில் திடீரென ஸ்டியரிங் பாக்ஸ் பேரிங் உடைந்து விட்டமையால் வாகனத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டமையால் சுகாதாரப்பணி அவசியம் கருதி ஓட்டுனரால் ஸ்டியரிங் பாக்ஸ் சர்வீஸ் செய்யப்பட்டு அதற்கான ரசீது நகல்கள் மற்றும் புகைப்படங்கள் ஓட்டுனரால் சமர்பிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்டுள்ள வாகனத்திற்கு ஸ்டியரிங் பாக்ஸ் சர்வீஸ் செய்தமைக்கும் அதற்கான செலவினம் ரூ. 3660/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 133/2019/எச்1)

**தீர்மானம் எண். 3301 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 2.</u>

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN-31-AL-1126 வாகனத்திற்கு 2018–19ஆம் ஆண்டிற்கு தகுதிச்சான்று புதுப்பித்தல் கட்டணம் ரூ. 700/– மற்றும் வேகக்கட்டுப்பாட்டு கருவி புதுப்பிக்க ரூ, 800/– மொத்தம் ரூ. 1500/– ரொக்கமாக வழங்குமாறு ஓட்டுனர் கோரியுள்ளதற்கிணங்க, தகுதிச்சான்று புதுப்பித்தல் மற்றும் வாகனத்தின் வேகக்கட்டுப்பாட்டு கருவி பொருத்திட மேற்கொள்ள ஆகும் செலவினம் ரூ. 1500/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 333/2019/எச்1)

**தீர்மானம் எண். 3302 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 3.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்கு எதிராக ஓ.எஸ்.எண். 131/2009ல் அஞ்சலை வகையரா அவர்கள் தங்களுக்கு சொந்தமான இடத்தில் (வயலூர் கிராமம் பழைய சர்வே எண். 67, புதிய சர்வே எண். 74) நகராட்சி சிமெண்ட் சாலை போட்டதாக ஆட்சேபணை தெரிவித்து வழக்கு தொடர்ந்தனர். மேற்படி வழக்கு தற்போது நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு வரப்பெற்றுள்ளதையடுத்து வழக்குறைஞர் கட்டணம் ரூ. 7000/– வழங்ககோரி திரு. ஜி. பாலசந்திரன், வழக்கறிஞர் அவர்கள் கடிதம் அளித்துள்ளார். எனவே மேற்படி தொகை ரூ. 7000/–வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 32/2019/இ1)

**தீர்மானம் எண். 3303 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 4.</u>**

விருத்தாசலம் நகராட்சிக்கு சொந்தமான வயலூர் உரக்கிடங்கு பகுதிகளில் சேகரிக்கப்பட்டுள்ள மரவு வழி கழிவுகளில் கொள்ளளவு எவ்வளவு என்பதை ஆய்வு செய்து தரக்கோரி இயக்குனர், சுற்றுச் சூழல் ஆய்வுகள் மையம், அண்ணா பல்கலை கழகம், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில மேற்படி ஆய்வினை மேற்கொள்ள வங்கி வரைவோலையாக “The Director, CTDT, Anna University, Chennai” என்ற பெயருக்கு ரூ. 177000/– (வரிகளுடன்) செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட தொகை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்படி தொகை செலுத்தியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 7187/2018/இ1)

**தீர்மானம் எண். 3304 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5.</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான செல்வராசு பேருந்து நிலையத்தில் 23 கடைகள் கட்டியது தொடர்பாக கூடுதல் உரிமையியல் நீதி மன்றம் எண். 1ல் ஓ.எஸ். 14/2008ல் வழக்கு திரு. எஸ். விஜயகுமார் மற்றும் திரு. எஸ். கே. கலியமூர்த்தி என்பவர்களால் ஏற்படுத்தப்பட்டு வழக்கு முடிவுற்று உரிய நீதிமன்ற உத்தரவு வழக்கறிஞர் வாயிலாக பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ. 7000/– வழங்கிட கோரி வழக்கறிஞர் பட்டியல் அனுப்பி வைத்துள்ளார். எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ. 7000/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 989/2012/அ2)

**தீர்மானம் எண். 3305 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6.**

விருத்தாசலம் நகராட்சிக்கு சொந்தமான வாரக்கால்நடை சந்தை மற்றும் பேருந்து நிலைய நுழைவுக் கட்டண வசூல் ஏலம் போகாத காரணத்தால் துறை ரீதியாக வசூல் செய்யப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில் மேற்கண்ட குத்தகை இனங்களில் டோக்கன் ரசீதுகள் தீரும் நிலையில் உள்ளதால் வாரக்கால்நடை சந்தை டோக்கன் ரசீதுகள் 5000 எண்ணிக்கையில், பேருந்து நிலைய நுழைவுக் கட்டண டோக்கன் ரசீதுகள் 100000 எண்ணிக்கைகள் மற்றும் இரவு நேர பேருந்து டோக்கன் ரசீது 2000 எண்ணிக்கைகள் உள்ளூர் அச்சகத்தில் அச்சிட்டுக்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ. 30000/– மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட டோக்கன்களை ஸ்ரீ முருகன் பவர் பிரஸ் நிறுவனத்திடம் ஏற்கெனவே அச்சிட்டு வழங்கிய விலைக்கே அச்சிட்டு வழங்க சம்மதம் தெரிவித்துள்ளதால் மேற்படி நிறுவனத்தில் முந்தைய விலை விகிதத்தில் அச்சிட்டு கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1611/2018/அ2)

**தீர்மானம் எண். 3306 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7.**

இந்நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகனம் எண். TN-31-AL-1135 டிப்பர் லாரி வாகனத்திற்கு டயர் வெடிக்கும் நிலையில் உள்ளதாலும் ,பேட்டரி பழுதடைந்துவிட்டதாலும் அதனை மாற்றி தருமாறு ஓட்டுனர் கோரியுள்ளார்.மேலும் துப்புரவு ஆய்வரின் குறிப்பின்படியும் ,பொது சுகாதாரம் அவசியத்தினை கருதியும் ,பொதுமக்களின் நலன் கருதியும், வாகனத்தின் முன்பக்கம் மற்றும் பின்பக்கம் டயர்கள் மற்றும் மின்கலப்பெட்டி வாங்கிடவும் ,அதற்குண்டான தோராய செலவினம் ரூ.90,000/–(ரூபாய் தொன்னூறு ஆயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 0435/2019/எச்1)

**தீர்மானம் எண். 3307 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 8.</u>**

விருத்தாசலம் நகராட்சியின்பொது சுகாதாரபிரிவில் தற்சமயம் சுய உதவிக்குழுக்களை சார்ந்த 77 தற்காலிகதுப்புரவு பணியாளர்களுக்கு தினக்கூலியாக மாவட்ட ஆட்சியர் கடலூர் அவர்களின் சந்தைவிகிதத்தில் நாள் ஒன்றுக்கு ரூ.275/- வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. மேற்படி காலை, மாலை, இரு வேளையும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்க்கொள்ளப்பட்டு வருகின்றனர். அதனை தொடர்ந்து தற்சமயம் அப்பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆணையின் படி சந்தை விகிதத்தில்( மாவட்ட ஆட்சியர் கடலூர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். M2/8302/2017 நாள். **19.06.2018)** நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ.**325**/- வீதம் வழங்க ஆணையர் அவர்களின் நேரடி அறிவுரையினை தொடர்ந்து துப்புரவு அலுவலர் அவர்களின் **18.01.2019** ம் நாளின் குறிப்பின்படி விருத்தாம்பிகை மகளீர் சுய உதவிக்குழு, விருத்தாசலம் அவர்களின் வாயிலாக பணியாற்றி வரும் 77 தற்காலிக துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு தினக்கூலியாக ரூ.275/- லிருந்து ரூ.**325**/- ஆக உயர்த்தி வழங்கிடவும், அவர்களுக்கான ESI மற்றும் EPF தொகை பிடித்தம் செய்து கொள்ளவும் அதற்கான செலவீனத்திற்கும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண். 289/2012/எச்1

**தீர்மானம் எண். 3308 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 9.</u>**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN-31-AL-1130 டாடா ஏஸ் வாகனத்திற்கு பேட்டரி பழுதடைந்துவிட்டதால் அதனை மாற்றி தருமாறு ஓட்டுனர் கோரியுள்ளார். மேற்படி துப்புரவு அலுவலர் அவர்களின் குறிப்பின்படியும், பொது சுகாதாரம் அவசியத்தினை கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் வாகனத்திற்கு மின்கலப்பெட்டி வாங்கிடவும், அதற்குண்டான தோராய செலவினம் ரூ. **9000/—** க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

கோப்பு எண்.0430 /2019/எச்1

**தீர்மானம் எண். 3309 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10.</u>**

விருத்தாசலம் நகராட்சி சம்மந்தமாக தினசரி நாளிதழ்களில் வெளிவரும் செய் துணுக்குகளுக்கு உரிய பதில் மாவட்ட ஆட்சியர், கடலூர் மற்றும் உயர் அலுவலர்களுக்கு அனுப்பவேண்டியுள்ளதால் கீழ்கண்ட தினசரி நாளிதழ்கள் 2019ஆம் ஆண்டுக்கு வாங்கவும் அதற்கு ஏற்படும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | தினசரி நாளிதழ் பெயர் | ஆண்டு சந்தா ரூ. |
|---|---|---|
| 1. | தினகரன் | 2040/– |
| 2. | தினமணி | 2520/– |
| 3. | இந்தியன் எக்ஸ்பிரஸ் | 1800/– |
| 4. | தினமலர் | 2200/– |
| 5. | தினத்தந்தி | 2300/– |
| 6. | தி இந்து | 2600/– |
| | மொத்தம் | 13460/– |

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. மேற்கண்ட தினசரி நாளிதழ்கள் ஜனவரி 2019 முதல்வாங்கப்பட்டு வருவதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மானம் எண். 3310 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் பொது நிதியின் கீழ் ரூ. 97500/– மதிப்பீட்டில் இந்நகராட்சி வாகனம் எண். TN-31-AZ- 5697 வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண். 3255, நாள். 31.12.2018ல் அனுமதியளித்ததற்கிணங்க 23.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | விஜய லட்சுமி ஆட்டோ மொபைல்ஸ்,<br>நெல்லிக்குப்பம் மெயின் ரோடு,<br>26, சிட்கோ, செம்மண்டலம், கடலூர். | 97500/– |
| 2. | வினாயகா ஆட்டோ கேரேஜ்,<br>3 ஜெயராம் நகர், வில்வராய நத்தம்,<br>கடலூர். | 102000/– |

**அலுவலக குறிப்பு:**

1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் விஜயலட்சுமி ஆட்டோ மொபைல்ஸ்,நெல்லிக்குப்பம் மெயில் ரோடு, 26, சிட்கோ, செம்மண்டலம், கடலூர் அவர்கள் அளித்துள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2. பணியில் அவசரம் அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 7187/18/இ1)

**தீர்மானம் எண். 3311 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12.**

விருத்தாசலம் நகராட்சி வார்டு எண். 12ல் முருகன் கோயில் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்து தரும்படி அப்பகுதி மக்களும், முன்னால் நகர் மன்ற உறுப்பினர் அவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க அப்பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு செய்ததில் அப்பகுதியில் மழைகாலங்களில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கு டெங்கு மற்றும் மலேரியா போன்ற தொற்று நோய் பரவாமல் இருக்க அப்பகுதி மழைநீர் வடிகால் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 600000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3312 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13.**

விருத்தாசலம் நகராட்சியில் பணிபுரியும் மற்றும் பணிபுரிந்த பணியாளர்களுக்கு பணிபுரிந்த காலத்தில் பிடித்தம் செய்யப்படும் சேமநலநிதி தொகைக்கு வட்டி கணக்கிட்டு அளிக்க விலைப்புள்ளி கோர நகர்மன்றம் தீர்மானம் எண். 3119, நாள். 24.08.2018ல் அனுமதி அளித்ததற்கிணங்க, விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விவரம் |
|---|---|---|
| 1. | ராஜ்ரேவ் சாப்ட் சிஸ்டம்,<br>வேல்யூ பில்டிங் ரிலேஷன்ஷிப்,<br>2, முத்தையாள் ரெட்டி நகர்,<br>3வது தெரு, ஆதம்பாக்கம், சென்னை. | 4103/—<br>நபர் ஒன்றுக்கு |
| 2. | என் டெக் சொலுயூஷன்ஸ்,<br>10, கௌதமர் தெரு,<br>கிழக்கு தாம்பரம், சென்னை. | 4613.50/—<br>நபர் ஒன்றுக்கு |
| 3. | வெங்கட் ஈவன்ட்ஸ்,<br>13, வேல் நகர் விரிவாக்கம்,<br>டிஏவி பள்ளி அருகில்,<br>ஆதம்பாக்கம், சென்னை. | 5123.90/—<br>நபர் ஒன்றுக்கு |

**அலுவலக குறிப்பு:**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் காணும் ராஜ்ரேவ் சாப்ட் சிஸ்டம், வேல்யூ பில்டிங் ரிலேஷன்ஷிப், 2, முத்தையாள் ரெட்டி நகர், 3வது தெரு, ஆதம்பாக்கம், சென்னை அவர்கள் அளித்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3975/18/பி3)

**தீர்மானம் எண். 3313 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 14.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2018–19ன் கீழ் ரூ. 425.00 இலட்சம் மதிப்பீட்டில் வயலூர் உரக்கிடங்கில் 40 KLD கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 26888/UGSS-2/2018, நாள். 12.11.2018ல் அனுமதியளித்தற்கிணங்க 10.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. வி. ஆர். மணிகண்டன்,<br>39/55, ஜங்ஷன் ரோடு,<br>விருத்தாசலம். | (+) 4.85 % அதிகம் |
| 2 | திரு. எம். கோதண்டம்,<br>3/5/9 வன்னியர் தெரு,<br>வீரனாத்தூர்,<br>பள்ளிபட்டு தாலுக்கா,<br>திருவள்ளுவர் மாவட்டம். | (+) 10.10 % அதிகம் |

**அலுவலக குறிப்பு:**

மேற்கண்ட திட்டப்பணி தமிழகத்தில் உள்ள 28 நகராட்சிகளில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு ஒரே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட பணிகளாகும். மேலும் மேற்படி பணி இதுவரை எந்தவொரு நகராட்சியிலும் செயல்படுத்தபடவில்லை என்பதாலும் இப்பணியில் முன் அனுபவம் பெற்ற ஒப்பந்ததாரர் எவரும் இல்லாத காரணத்தாலும், வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் காணும் திரு. வி. ஆர். மணிகண்டன், 39/55, ஜங்ஷன் ரோடு, விருத்தாசலம் அவர்கள் மதிப்பீட்டைவிட அதிகமாக அளித்துள்ள 4.85% ஒப்பந்தப்புள்ளியை தமிழ்நாடு பொறியாளர் கையேட்டில் திட்டப்பணிகளில் நகராட்சி பொறியாளருக்கு மதிப்பீட்டினைவிட அதிகமாக 5 சதவிகிதத்திற்குள் அனுமதிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க மேற்படி ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 3085/18/இ1)

**தீர்மானம் எண். 3314 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 15.</u>**

விருத்தாசலம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருவிளக்கு இல்லாத மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதிகளில் பொதுமக்களின் நலன் கருதியும் மின்சார சிக்கனத்தினை கருத்திற்கொண்டும் 17 இடங்களில் சோலார் தெருவிளக்குகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 370000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3315 , நாள். 31.01.2019.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 16.</u>**

விருத்தாசலம் நகராட்சி சொந்தமான நகராட்சி துவக்கப்பள்ளி, அய்யனார் கோயில் தெரு பள்ளி, மணலூர் நகராட்சி பள்ளி, சாத்துக்கூடல் சாலை பள்ளி, வயலூர் பள்ளி, பூந்தோட்டம் நகராட்சி துவக்கப்பள்ளி ஆகிய இடங்களில் உள்ள நகராட்சி தொடக்கப் பள்ளிகளுக்கு மின்சார கட்டணம் குறைக்கும் பொருட்டு வருகின்ற கோடை காலங்களில் மின்சாரம் இல்லாத நேரங்களில் மாணவர்களுக்கு லைட் மற்றும் பேன் இயங்கும் வகையில் சோலார் பேனல் போர்டு அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 241500/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3316 , நாள். 31.01.2019.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 17.</u>**

விருத்தாசலம் நகராட்சி வார்டு எண். 1ல் வயலூர் உரக்கிடங்கில் FSTP பணி நடைபெற உள்ளதால் (கசடு, கழிவு) விருத்தாசலம் நகராட்சிக்கு சொந்தமான டம்பர்பின் லாரியை சல்லேஜ் வண்டியாக மாற்றி FSTP பணிக்கு பயன்படுத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் 995000/— க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3317 , நாள். 31.01.2019.**

**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 18.</u>**

விருத்தாசலம் நகராட்சியில் புதியதாக வாங்கப்பெற்ற பேட்டரி ஆப்பரேட்டர் வாகனங்களுக்க (BOV) Charging Power Station கல்லூரி நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்திலும், ஆலிச்சிகுடி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்திலும் செட் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் **500000/–** க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3318 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 19.</u>**

விருத்தாசலம் நகராட்சி அய்யனார் கோயில் தெரு நகராட்சி துவக்கப்பள்ளியில் பள்ளியின் முன்புறம் குண்டும், குழியுமாக உள்ளதால் மாணவர்கள் நடப்பதற்கு சிரமமாக இருப்பதால் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கிறது. அதனால் மாணவர்களுக்கு நோய் ஏற்படும் சூழ்நிலை இருப்பதால் பள்ளியின் முன்பகுதியிலும் நடைபாதையிலும் Paver Block அமைத்து தருமாறு ஆசிரியர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நேரில் சென்று ஆய்வு செய்து தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. **350000/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண். 3319 , நாள். 31.01.2019.**
**அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் / ஆணையாளர்,
விருத்தாசலம் நகராட்சி